1980 பிப்ரவரி 6]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கிட்டப்பா அவர்கள் எழுப்பிய பிரச்சனை நியாயமாக இருந்தாலும் அவர்கள் கூறியது இந்தக் கேள்வியை ஒட்டியதல்ல. அமைச்சர் அவர்கள் தம் விருப்பப்படி சொன்னார்கள். அதைத் தவிர்த்திருக்கலாம். அவர்கள் தமிழிலேயே சொல்லியிருக்கலாம். இக் கேள்வியை யொட்டியதாக இருந்தால் தமிழில் சொல்லச் சொல்லியிருப்பேன். ஆனால் அவர்கள் சொன்னது இக்கேள்வியையொட்டியதல்ல. எனவே இனிமேல் வருமானால் தமிழிலேயே சொல்ல ஏற்பாடு செய்கிறேன்.

அயோத்தியா நகர் குடியிருப்புகளுக்கு மின் இணைப்பு வழங்கல்

*வினா எண். 72 திரு. சென்னை மு. அரங்கநாதன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.—

(அ) திருவல்லிக்கேணி தொகுதியிலுள்ள அயோத்தியா (குப்பம்) நகரில் குடிசைமாற்று வாரியத்தின் சார்பில் கட்டப் பட்ட குடியிருப்புகளில் ஒரு பகுதிக்கு மின்தொடர்பு கொடுக்கப் பட்டு, ஒரு பகுதிக்கு இதுநாள்வரை மின்தொடர்பு கொடுக்கப் படாமல் இருப்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், உடனடியாக மின்தொடர்பு கொடுக்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:—(அ) மற்றும் (ஆ): அயோத்தியா நகரில் 708 குடியிருப்புகள் உள்ளன. இதில் 251 குடியிருப்புகளுக்கு மின் இணைப்புக் கொடுக்கப்பட்டதில், தற்போது 111 குடியிருப்புகளில்தான் நிலையான மின் இணைப்பு உள்ளது, குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் மூலம் மின் இணைப்புக் கொடுப்பது இப்போது நிறுத்தப்பட்டு விட்டது. மின் இணைப்பு பெற மின்சார வாரியத்திற்கு ஒரு தடையின்மை சான்றிதழ் அளிக்கப்படுகிறது. அதைக் கொண்டு ஒதுக்கீடுதாரர் தாங்களாகவே மின் வசதி பெறலாம்.

திரு. சென்னை மு. அரங்கநாதன்: ஏற்கனவே அளிக்கப் பட்டமுறையிலே அங்கிருக்கிற அத்தனை குடியிருப்புகளுக்கும் மின்வசதி செய்துதர இயலுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மின்வசதி பற்றிக் கேட்கிறார்கள் என்று நினைக்கிறேன். நான் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். உண்மையாகவே மின்வசதி வேண்டுமென

விருப்பம் தெரிவிப்பவர்களுக்கு மட்டும் மின்வசதி பெற்றுத் தரலாமென முடிவு செய்யப்பட்டு அந்தப்படிக்கு வாரியம் தனது 28–10–73-ம் தேதிய சுற்றறிக்கையில் உத்தரவிட்டுள்ளது. மின் வசதி செய்து கொள்ள விரும்பும் ஒதுக்கீடுதாரர்களின் குடியிருப்பு களுக்கு மட்டும் அக்குடியிருப்புக்குண்டான வாடகை பாக்கியை வசூல் செய்து கொண்டு 'தடையின்மைச் சான்று' நிர்வாகப் பொறியாளர்களால் வழங்கப்படுகிறது. வாரியமே மின் இணைப்புத்தருவது வேண்டாம் என 28–10–73-லே உத்திரவிடப் பட்டுள்ளது.

திரு. சென்னை மு. அரங்கநாதன்: ஏற்கனவே கொடுக்கப் பட்டிருக்கிறது. மீனவர்கள் வாழ்கிற, மிகவும பின்தங்கிய, வருவாய் அதிகமில்லாத, கஷ்டப்பட்டு வாழ்கிற அத்தகையவர் கள் இருக்கும் பகுதிகளில் ஒரு பகுதிக்கு வாரியமே பொறுப்பேற்று மின்வசதி செய்து கொடுத்திருக்கிறார்கள். ஆனால் மற்றப் பகுதியினருக்கு அவர்கள் சான்றிதழ் பெற வேண்டும் என்ற நிலையில் அந்தப் பகுதியில் இருப்பவர்களுக்கு ஒரு பகுதினயிருக்கு இலவசமாகக் கொடுக்கப்பட்ட பின் இப்படி ஒரு நிபந்தனை விதிப்பது நியாயமற்றது என்று வேண்டுகோள் விடுத்திருக்கிறார் கள். ஆகவே அந்த வேண்டுகோளை ஏற்று அவர்களுக்குக் அந்த அடிப்படையில் மின்வசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: முன்பிருந்த அரசு ஏற்கனவே எடுத்த முடிவைப் படிக்கிறேன். குடிசைப் பகுதி மாற்று வாரியம் குடியிருப்புகளுக்கு ஆரம்பத்தில் வாரியத்தா லேயே மின் இணைப்புக் கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் ஒதுக்கீடுதாரர்கள் மின்சார வாரியத்திற்குச் செலுத்த வேண்டிய மின்சாரக் கட்டணத் தொகையைச் சரிவர செலுத்தவில்லை. இதனால் மின்இணைப்பு பலவற்றில் துண்டிக் கப்பட்டன. அத்துடன் ஒதுக்கீடுதாரர்கள் பதுக்கி வைத்த மின் கட்டணத் தொகையும் குடிசைமாற்றுவாரியமே செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது. ஆகவே அதனால் முன்பிருந்த அரசு அவர்களுக்கு மின் இணைப்பு தருவதற்கில்லை, வேண்டும் மென்று கேட்பார்களேயானால் 'தடையின்மைச் சான்று' தருவது என்று முடிவு செய்திருக்கிறது. அதை மாற்ற வேண்டுமென்றால் அதைப்பற்றி பரிசீலனை செய்யலாம்.

(முற்பகல் 9.40)

திரு. சென்னை மு. அரங்கநாதன்: பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொன்ன பதிலில் இருந்து ஏற்கெனவே இன்னும் கொடுக்கவேண்டிய பாக்கியை வசூலித்துக் கொடுக்கும் பொறுப்பை நான் ஏற்றுக்கொள்கிறேன். அந்த அடிப்படையில், மற்றவர்களுக்கு வசதிசெய்து கொடுக்கப்படுமா?

1981 பிப்ரவரி 6]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே முன்பிருந்த அரசு 1972 ஆம் ஆண்டிலே, 1973 ஆம் ஆண்டிலே பாக்கியிருந்ததால், அதன்மீது ஒரு முடிவெடுத்திருக்கிறார்கள். இதற்குக் காரணம் மின்கட்டணத்தை அங்கிருந்தவர்கள் சரியாகக் கொடுக்கவில்லை வேண்டுமானால், தாங்களாகவே வைத்துக் கொள்ளலாம் என்று முடிவெடுத்திருக்கிறார்கள். அதை மீண்டும் பரிசீலனை செய்வது பற்றி அரசு ஆலோசனை செய்யும்.

தூத்துக்குடி துறைமுகம்.

*வினா எண் 73— திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தூத்துக்குடி துறைமுக மேம்பாடு குறித்து தூத்துக்குடி துறைமுகக் குழுமத்திற்குப் பரிந்துரை ஏதும் செய்யப்பட்டுள்ளதா?

திரு. ப.கோ.கிட்டு (அமைச்சரின் பேரவை செயலர்): இல்லை.

திரு. ந. தனசேகரன்: பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி துறைமுக வளர்ச்சிக்காக தமிழக அரசுக்கு ஏதாவது குழு ஒன்றினை அமைக்கும் உத்தேசம் இருக்கிறதா? அப்படி உத்தேசம் இருந்தால், அது எந்த நிலையில் இருக்கின்றது என்பதை அறிய விரும்புகிறேன்?

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவைச் செயலர்): தலைவர் அவர்களே, ஒரு குழு தமிழக அரசால் அமைக்கப்பட்டிருக்கிறது. தூத்துக்குடியிலுள்ள பழைய துறைமுகம் 1-4-79 முதல், புதிய துறைமுகத்தோடு ஒன்றாகச் சேர்க்கப்பட்டிருக்கிறது. அப்படிச் சேர்க்கப்பட்ட துறைமுகம் மத்திய அரசின் கட்டுப்பாட்டின கீழ் வந்துள்ளது. தூத்துக்குடி துறைமுக மேம்பாடு குறித்து மாநில அரசு, தலைமைச் செயலாளரின் தலைமையில் பதினாறு உறுப்பினர்கள் கொண்ட உயர்மட்டக் குழு ஒன்றை அமைத்துள்ளது. அக் குழுவில், உள்ளூர் இந்திய வணிக தொழில் வர்த்தக சபை, தூத்துக்குடி தொழில் வளர்ச்சிசங்கம், தமிழ்நாடு மின்வாரியம், தென் ரயில்வே ஆகியவற்றின் பிரதிநிதிகள் உறுப்பினர்களாக உள்ளனர். இதுவரை, தூத்துக்குடியில் மூன்று கூட்டங்கள் நடைபெற்றன. பல பொருள்கள் பற்றி விவாதிக்கப்பட்டு இருக்கிறது.

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் துறைமுக மேம்பாடு குறித்து ஒரு குழு அமைக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் செயலர் அவர்கள் சொன்னார்கள்.